

# முடிவு இல்லையா?

(மு. முத்துஜோதி)



சேவல் கோழி இரண்டு இங்கே
சேர்ந்து பேசுது - இனி
ஆவலுள்ளோர் அதை இங்கே
அறிந்து கொள்ளுவீர்!
(சேவலும் கோழியும் பேசிக்கொள்கின்றன)

மேடுபள்ளம் காடு எல்லாம்
மேய்ந்து தேடியே - நாம்
வாடுகின்ற வயிறதற்கு
உணவு கொடுக்கிறோம்



இரண்டுபேரும் நாமிப்படி
இருந்து வாழ்ந்து தான்
திரண்டெடுத்து முட்டையாக
கருவளர்க் கிறோம்!

கொஞ்சி நம் பிள்ளையோடு
குலவி மகிழ்ந்திட — நாம்
குஞ்சுகளைப் பொறித்திடவே
கனவு காண்கிறோம்!

ஆனால் நம்ம வீட்டுக்காரன்
என்ன செய்கிறான் - நாம்
போனால் என்ன வயிற்றுக்குள்ளே
என்று நினைக்கிறான்!



வீட்டுக்காரன் முட்டைகளை
விரைந்து கொண்டுபோய் - தினம்
நாட்டுமுட்டை என்றுச் சொல்லி

நயந்து தின்கிறான்!



மீதமுள்ள முட்டைகளை
இயந்திரத்தினால் - இவர்
ஏதம் செய்து எப்படியோ
குஞ்சு பொறிக்கிறார்!

குஞ்சுகளும் குவா குவா
என்று அழுதுமே - இவர்
நெஞ்சமின்றி வாணலிலே
நெய்யில் பொறிக்கிறார்!



பருந்து கண்ணில் பட்டிடாமல்
பாதுகாக்கிறோம் - குஞ்சை
விருந்து செய்யும் இவர்களிடம்
என்ன செய்குவோம்?

உன்னை என்னை மட்டும் இவர்கள்
விட்டு விட்டாரா? நம்மை
அன்னையாக ஆதரித்த
இந்த மனிதரே

கொதிக்கின்ற நீரினிலே
கொண்டு அழுத்துவார் - இவர்
ததிக்கின்ற நம் உடலை
தின்று மகிழுவார்!



கத்தி கொண்டு நம் கழுத்தை
கதற வெட்டுவார் - இவர்
ரத்தம் சொட்ட நம் உடலை
ரசித்து உண்ணுவார்!

பெண்டுபிள்ளை மக்களோடு
மனிதர் மகிழ்கிறார்! — ஆனால்

துண்டு போட்டு நம் இனத்தை

துயரப் படுத்துறார்!



ஐயோ! இவர்கள் செயலுக்கு

முடிவு இல்லையா! – நாம்

குய்யோ முறையோ என்றிட்டாலும்

கேள்வி இல்லையே!

(துன்பம் தொண்டை அடைக்க, இரண்டும் அப்படியே விக்கித்து நின்று விடுகின்றன)



